# வெள்ளகோவில் நகராட்சி
# திருப்பூர் மாவட்டம்
## 2016-2017-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

**1. அமைப்பும் நிர்வாகமும்**

தமிழ்நாடு அரசின் அவசரச்சட்டம் 07 / 2004–ல் நகராட்சியாக மாற்றப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண். 150 நாள் : 14.06.2004 முதல் மூன்றாம்நிலை நகராட்சியாக மாற்றம் செய்யப்படுவதற்குரிய அறிவிப்பு அரசினரால் வெளியிடப்பட்டு 14.06.2004 முதல் “ வெள்ளகோவில் மூன்றாம் நிலை நகராட்சி ” என மாற்றப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 154, நாள். 09.08.2010–ன்படி வெள்ளகோவில் மூன்றாம் நிலை நகராட்சியாக இருந்து தரம் உயர்த்தப்பட்டு 09.08.2010 முதல் வெள்ளகோவில் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது

**நகராட்சி எல்லை**

இந்நகராட்சி, வெள்ளகோவில் வருவாய் கிராமத்தில் அடங்கியுள்ளது. நடப்பாண்டில் இந்த எல்லையில் மாறுதல் ஏதுமில்லை. இதன் பரப்பளவு 64.75 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

**மக்கள் தொகை**

2011–ம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த எண்ணிக்கை 40359. இதில், ஆண்கள் 20158, பெண்கள் 20201.

**2. நிர்வாக அலுவலர்கள்**

1) திரு. இ. ஷாஜஹான், ஆணையாளர் அவர்கள் 01.04.2016 முதல் 31.03.2017 வரை பணியாற்றி உள்ளார்.

**3. தேர்தல்**

இந்நகர் மன்றம் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்நகர் மன்றத்திற்கு உறுப்பினர்களில் தலைவர் தேர்ந்தெடுக்கும் முறை 2006 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் அத்தியாயம் ‘B’ பிரிவு த.W. – ன் உட்பிரிவு 4(a) (b) & 5-ன்படி வெள்ளகோவில் நகராட்சி தலைவர் பதவி பொதுப்பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இருந்த பெண்கள் (பொது), ஆதிதிராவிடர் (பொது) ஆகிய வார்டுகளுக்கு முன்னிருந்தபடியே கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மொத்தம் உள்ள வார்டுகள் | – | 21 |
| பெண்கள் (பொது) | – | 6 (6,9,10,15,16 & 19) |
| ஆதிதிராவிடர் (பொது) | – | 1 (8) |
| ஆதிதிராவிடர் (மகளிர்) | – | 1 (11) |
| பொது வார்டுகள் | – | 13 (1,2,3,4,5,7,12,13,14,17,18,20 & 21) |

மேற்காணும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் வார்டு உறுப்பினர் தேர்தல் 17.10.2011–ல் நடைபெற்றது. மேலும் நகர்மன்றத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் இறந்துவிட்டதால், தலைவர் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டு பின் 27.11.2011–ல் தேர்தல் நடைபெற்று

திரு. வெ. கந்தசாமி என்பவர் நகர்மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைத் தலைவராக 5–வது வார்டு உறுப்பினர் திரு. ப. தங்கராஜ் என்பவர் நகர்மன்றத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

| வ.எண் | வார்டு எண் | உறுப்பினர்கள் பெயர் | பதவியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | | திரு. வெ. கந்தசாமி | நகர்மன்றத் தலைவர் |
| 2 | 5 | திரு. ப. தங்கராஜ் | நகர்மன்றத் துணைத்தலைவர் |
| 3 | 1 | திரு. வி.சி. இராமசாமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 4 | 2 | திரு. த. பாலசுப்பிரமணியம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 5 | 3 | திருமதி. செ. புஷ்பம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 6 | 4 | திரு. க. மணி | நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | 6 | திருமதி. சி. சுசி | நகர்மன்ற உறுப்பினர் |
| 8 | 7 | திரு. அ. மகாதேவன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 9 | 8 | திரு. சே. செல்வராஜ் | நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | 9 | திருமதி. ர. பொன்னாத்தாள் | நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | 10 | திருமதி. து. வசந்தாதேவி | நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | 11 | திருமதி. ரா. ராணி | நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | 12 | திரு. கு. மரகதவடிவேல் | நகர்மன்ற உறுப்பினர் |
| 14 | 13 | திரு. கு. பழனிச்சாமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | 14 | திரு. சா. விவேகானந்தன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | 15 | திருமதி. வி. நந்தினிதேவி | நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | 16 | திரு. ரா. முத்துலட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | 17 | திரு. த. தனலட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 19 | 18 | திரு. ரா. ராதாகிருஷ்ணன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | 19 | திருமதி. ச. கலையரசி | நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | 20 | திரு. செ. பழனிச்சாமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 22 | 21 | திரு. ச. முருகானந்தம் | நகர்மன்ற உறுப்பினர் |

**4. நகர் மன்ற நடவடிக்கைகள்.**

1. நடப்பாண்டில் நகர்மன்றத்தின் பதவிக்காலம் 24.10.2016–ல் முடிவடைவதால், நகர்மன்றத்திற்கான தேர்தல் 19.10.2016–ல் நடைபெறும் என 26.09.2016–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டது. பின்னர் சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 33984 / 2016, நாள். 04.10.2016–ல் உள்ளாட்சித் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 146, நாள். 24.10.2016–ல் நகராட்சி ஆணையாளரை நகர்மன்றத் தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டது.
2. மாதந்தோறும் சாதாரணக் கூட்டங்களும், மேலும் அவசர அவசியம் ஏற்படும்பொழுதெல்லாம் அவசரக் கூட்டம் நடைபெற்றன.
3. நடப்பு ஆண்டில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் 4 சாதாரணக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சிறப்புக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட 100 பொருள்கள் முடிவு செய்யப்பட்டன.

4. நடப்பு ஆண்டில் ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் தலைமையில் 6 கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றில் 5 சாதாரணக் கூட்டமும், 1 அவசரக் கூட்டமும் நடத்தப்பட்டது. நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட 123 பொருள்கள் முடிவு செய்யப்பட்டன.

| | | **நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை** | **முடிவு செய்யப்பட்ட பொருள்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| | நகர்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் | | |
| 1 | சாதாரணம் | 4 | 100 |
| 2 | அவசரம் | - | - |
| | ஆணையாளர் / தனி அலுவலர் கூட்டம் | | |
| 1 | சாதாரணம் | 5 | 121 |
| 2 | அவசரம் | 1 | 2 |
| | | **10** | **223** |

**5. குழுக்கள்**

2016–2017–ம் ஆண்டில், வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழுக் கூட்டம் நடைபெறவில்லை.

**6. குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியில் இரண்டு மின் பணியாளர், ஒரு குழாய் ஆய்வாளர், ஒரு பிட்டர், மூன்று குடிநீர் விநியோக பராமரிப்பவர்கள், ஒரு குடிநீர் விநியோக உதவியாளர் மற்றும் இரண்டு காவலர்கள் ஆகியோர்களைக் கொண்டு குடிநீர்ப் பிரிவு பராமரிக்கப்படுகிறது.

**குடிநீர்திட்டங்கள்**

1) காவிரி ஆறு
2) அமராவதி ஆறு

முறையே 30.00 இலட்சம், 10.00 இலட்சம் லிட்டர்கள் தினசரி தண்ணீர் இதன் மூலம் விநியோககிக்கப்படுகிறது.

**7.பணியாளர்கள்**

பொறியியல் பிரிவில் நகராட்சிப்பொறியாளர், பணிமேற்பார்வையாளர் மற்றும் பணி ஆய்வர்என தலா ஒருவர் உள்ளார்.

**8. சாலைகள்**

அ. இந்நகர எல்லைக்குள், யாதொரு நெடுஞ்சாலையும், நகர்மன்றப் பராமரிப்பில் இல்லை. இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 202.59 கிலோ மீட்டர் ஆகும். இதன் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) தார் ரோடு | –– | 165.94 | கிலோ மீட்டர் |
| 2) சிமெண்ட் ரோடு | –– | 12.46 | கிலோ மீட்டர் |
| 3) மண் ரோடு | –– | 24.19 | கிலோ மீட்டர் |
| **மொத்தம்** | –– | **202.59** | **கிலோ மீட்டர்** |

ஆ. நடப்பாண்டில், வண்டி வாகனாதிகள் வகையில் வரவு ஏதும் இல்லை. நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள் நல்லமுறையில் பராமரிக்கப் படுகின்றன.

**9. பயணிகள் தங்கும் விடுதி**

இந்நகராட்சியில், பயணிகள் தங்கும் விடுதி ஏதும் இல்லை.

**<u>1 0. கருவிகளும் கிடங்குகளும்</u>**

பொது சுகாதாரப் பணிக்கு டிப்பர் லாரி மூன்றும், டம்பர் பிளேசர் லாரி இரண்டும் உபயோகப்படுத்தப்படுகிறது. இது நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1) டம்பர் பிளேசர் | – | 2 |
| 2) டிப்பர் லாரி | – | 3 |
| 3) டம்பர் பின்கள் | – | 76 |
| 4) சைக்கிள் | – | 10 |
| 5) தள்ளு வண்டிகள் | – | 20 |
| 6) ஜே.சி.பி. | – | 1 |

**<u>11. விளக்குகள்</u>**

இந்நகராட்சி எல்லைக்குள் 3040 விளக்குகள் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1 | சோடியம் | 332 |
| 2 | மெர்குரி | –– |
| 3 | 20 வாட்ஸ் எல்.இ.டிவிளக்குகள் | 2030 |
| 4 | ஹைமாஸ்ட் | 6 |
| 5 | சி.எப்.எல் | 342 |
| | **மொத்தம்** | **2726** |

சாலையில் கிலோ மீட்டருக்கு 15 விளக்குகள் உள்ளது. தெரு விளக்குகள் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் அனைத்தும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் தெரு விளக்கு மற்றும் குடிநீர் பராமரிப்பிற்காக, மின்கட்டணமாக மின் வாரியத்திற்கு ரூ. 95.00 /– இலட்சம் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

**<u>12 கல்வி வசதிகள்</u>**

இந்நகராட்சியால், தொடக்கப்பள்ளியோ, உயர்நிலைப் பள்ளியோ பராமரிக்கப்படுவது இல்லை.

**<u>13–21 இல்லை</u>**

**<u>22 பொது நூலகங்கள்</u>**

பெரியார் மாவட்ட நூலக ஆணைக்குழுவால் ஒரு நூலகம், வெள்ளகோவிலில் இயங்கி வருகிறது.

**<u>23–25 பொது சுகாதாரம்</u>**

மருந்தகம் மற்றும் மருத்துவமனைகள் ஏதும், இந்நகராட்சியால் பராமரிக்கப்படுவது இல்லை.

**<u>26. நிர்வாகமும், பணியாளர்களும்</u>**

இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் பணியிடம்–1, துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம்–1, ஓட்டுநர் பணியிடம்–1 மற்றும் துப்புரவு பணியாளர்கள் 25 பேர் உள்ளனர்.

**<u>27 பிறப்பு விகிதமும் பேறுகால உதவியும்</u>**

1) நடப்பு ஆண்டில் 421 குழந்தைகள் பிறந்தது பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 395 ஆக இருந்தது. பிறப்பு விகிதம் 1000 பேருக்கு 9.8 என்று கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் பிறப்பு விகிதம் 14 % ஆகும்.
2) இந்நகராட்சியில் பேறு கால உதவியாளர்கள் யாரும் இல்லை.
3) நடப்பு ஆண்டில் பிறப்பு 1000–க்கு 9.8 சதவிகிதமாகும். பேறுகால இறப்பு ஏதும் இல்லை.

**28 இறப்பு வீதமும் மற்ற வியாதிகளால் இறந்தோர் எண்ணிக்கை**

இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளரால் பிறப்பு இறப்பு பதிவு செய்யப்படுகிறது. அறிக்கையாண்டில் 310 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில், 300 ஆக இருந்தது.

**தடுப்பு மருந்து**

கொசு ஒழிப்புத் திட்டம், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்களால் செயல்படுத்தப்படுகிறது. 2016–2017–ம் ஆண்டில், இத்திட்டத்திற்காக செவழிக்கப்பட்ட தொகை ரூ. 8,00,000 /–.

**29. துப்புரவு**

இந்நகராட்சியில் குப்பைக்கிடங்கிற்காக சொரியங்கிணத்துப்பாளையம் கிராமம் அருகே ரீ.ச.எண் : 435 / B1-ல் 3.30 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் 2006–07–ம் ஆண்டில் உரக்கலவை தயாரிக்க கான்கீரிட் தளம் 5.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் குடிநீர் வசதி ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆகிய இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 2007–08–ம் ஆண்டில் நடப்பாண்டில் உரக்கிடங்கில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் ரூ. 5.90 /– இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2008–09–ம் ஆண்டு 12–வது மாநில நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ. 7.85 /– இலட்சம் மதிப்பீட்டில் Tata tipper lorry ஒன்று வாங்கப்பட்டு குப்பைகள் அள்ளும் பணிக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் காலியாக உள்ள இடத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது. விரைவில் உரக்கலவை பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மக்கிய குப்பை, மக்காத குப்பை, என தரம் பிரிக்கப்பட்டு, உரங்கள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டப்பிரிவின்படி கடைகள், தேநீர் ஓட்டல்கள் ஆகிய இடங்களை துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆய்வு செய்து சுகாதார முறையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்ய அறிவுறுத்துக்கின்றனர். மேலும் பிளாஸ்டிக் மேலாண்மை விதிகளின்படி 50 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யப்பட்டு ஆய்வு செய்து துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் மூலம் பறிமுதல் செய்யப்படுகிறது. மேலும் பொது சுகாதாரப் பிரிவுக்கு ரூ. 26.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு டம்பர் பிளேசர் லாரி மற்றும் 20 எண்ணிக்கை டம்பர் பின்கள் வாங்கப்பட்டுள்ளது. மேலும் 2012–13–ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 50.10 இலட்சம் மதிப்பீட்டில் ஜே.சி.பி. இயந்திரம் ஒன்று, டம்பர் பிளேசர் லாரி–1 மற்றும் 13 எண்ணிக்கை டம்பர் பின்கள் வாங்கப்பட்டுள்ளது.

**அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்**

இத்தொழில்களை நடத்த உரிமையாணை கோரி வரும் விண்ணப்பத்தின் பேரில் ஆணையாளர் அவர்களும், சுகாதார ஆய்வாளரும் பார்வையிட்டு, அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில், கொடுக்கப்பட்ட லைசென்ஸ்கள் எண்ணிக்கையும், வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகையும் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2014-2015 | 512 | 2,38,120 /- |
| 2015-2016 | 473 | 2,52,940 /- |
| 2016-2017 | 573 | 2,14,657 /- |

**30 குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியில் இரண்டு குடிநீர்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1) அமராவதி குடிநீர்த்திட்டம் – நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது.
2) காவிரி கூட்டுக்குடிநீர்த்திட்டம் – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ளது.

இதன் தலைமை நீரேற்று நிலையம் வெள்ளகோவிலிருந்து தெற்கே 10 கி.மீட்டரில் புதுப்பை என்ற கிராமத்தில் அமராவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 10,00,000 லட்சம் லிட்டர் குடிநீர் உந்தப்பட்டு வெள்ளகோவில் மூலனூர் ரோட்டில் உள்ள நீருந்து நிலையம் மூலம் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு முறைப்படி விநியோகம் செய்யப்படுகிறது.

**காவிரி குடிநீர்த்திட்டம்**

கொடுமுடி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 5 கி.மீட்டர் தூரத்தில் உள்ள இச்சிப்பாளையம் என்ற இடத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் வந்து சுத்திகரிப்பு செய்து பிறகு 10 கி.மீட்டர் தூரத்தில் உள்ள மேட்டுக்கடை நீருந்து நிலையத்திற்கு குடிநீர் வந்து அங்கிருந்து 10 கி.மீட்டர் தூரத்தில் உள்ள கல்லுக்குட்டைமேடு என்ற இடத்தில் உள்ள நீருந்து நிலையத்திற்கு குடிநீர் வந்து வெள்ளகோவில் நகராட்சிப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 471 பொதுக்குழாய்கள் மூலமும், 5303 வீட்டு இணைப்புகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் கட்டண விகிதம்

குடியிருப்பு – ரூ. 65 /–
வியாபாரத்திற்கு– ரூ. 115 /–
தொழிற்சாலை – ரூ. 115 /–

**குடிநீர் விநியோகம்**

**அமராவதி குடிநீர் விநியோகம்**

தண்ணீர் தொட்டியிலிருந்து பிரதான குழாய் மூலம் 10,00,000 லட்சம் லிட்டரும் வழியோர கிராமப்பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**31 பாதாள சாக்கடைத் திட்டம்**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடப்பு ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நில அளவை பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

**2016–17–ம் ஆண்டில் அரசு மான்யம் திட்டப்பணிகள் விபரம்**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | **2016–17–ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்**<br>வெள்ளகோவில் நகராட்சியின் வார்டு எண். 1 மற்றும் 4–ல் உப்புப்பாளையத்தில் 3 மின்கம்பங்கள் மற்றும் 6 தெருவிளக்குகள் அமைத்தல் | 110000 |
| 2 | வெள்ளகோவில் நகராட்சியில் உள்ள வார்டுகளில் புதிதாக மின் சிக்கன விளக்குகள் (LED) பொருத்தும் பணிகள் | 374000 |
| 3 | வெள்ளகோவில் நகராட்சியில் உள்ள வார்டுகளில் புதிதாக மின் சிக்கன விளக்குகள் (LED) பொருத்த தேவையான உபகரணங்கள் வாங்குதல் | 100000 |
| 4 | **2016–17–ம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**<br>நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள கீழ்கண்ட அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பிடம் கட்டுதல் மற்றும் சிறிய பழுது நீக்க பணிகளுடன் தண்ணீர் வசதிகள் செய்தல்<br>1) வெள்ளகோவில் மேற்கு<br>2) உப்புப்பாளையம்<br>3) குமாரவலசு<br>4) தீத்தாம்பாளையம் | 248000 |
| 5 | **2016–17–ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்**<br>வார்டு எண். 3, துரைராமசாமி நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் | 100000 |
| 6 | வார்டு எண்.3, வெங்கமேடு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் | 100000 |
| 7 | வார்டு எண். 16, செம்மாண்டம்பாளையம் ரோடு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் | 100000 |
| 8 | வார்டு எண். 16, தாராபுரம் ரோடு ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் | 100000 |
| 9 | மு.பழனிச்சாமி நகர் மற்றும் குட்டக்காட்டுப்புதூர் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 300000 |
| 10 | வார்டு எண். 2, திருவள்ளவர் நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் | 100000 |
| 11 | வார்டு எண். 20, எல்.கே.சி.நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கைபம்பு பொருத்துதல் | 100000 |
| 12 | வார்டு எண். 21, பாரதி நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து, மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் செய்தல் | 370000 |
| 13 | வார்டு எண். 10, மூலனூர் ரோடு பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 80000 |
| 14 | வார்டு எண். 12, கரட்டுப்பாளையம் பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 270000 |
| 15 | **2017–18–ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம்**<br>வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் ஒரு சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 1000000 |
| 16 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட தண்ணீர்பந்தல் பகுதியில் ஒரு சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 1000000 |
| 17 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட கரட்டுப்பாளையம் பகுதியில் ஒரு சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 1000000 |
| 18 | **2016–17–ம் ஆண்டு 14–வது நிதிக்குழு மான்யத் திட்டம்**<br>எல்.கே.சி.நகர், துரைராமசாமி நகர், கே.பி.சி.நகர் பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் | 1850000 |

| | | |
|---|---|---|
| 19 | சொரியங்கிணத்துப்பாளையம் உரக்கிடங்கு செல்லும் சாலையை சீரமைத்தல் | 2750000 |
| 20 | நடேசன் நகர், மு.பழனிச்சாமி நகர், ஈரோடு ரோடு மற்றும் அழகாபுரி நகர் பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் | 2900000 |
| 21 | **2016–17–ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டம்– 1**<br>நகராட்சிக்குட்பட்ட மு.பழனிச்சாமி நகர், பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்தல் | 330000 |
| 22 | நகராட்சிக்குட்பட்ட வேலகவுண்டன் பாளையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்தல் | 330000 |
| 23 | நகராட்சிக்குட்பட்ட மூலனூர் ரோடு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்தல் | 340000 |
| 24 | **2016–17–ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டம்– 2**<br>எல்.கே.சி.நகர் மற்றும் திருவள்ளுவர் நகரில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு காற்றழுத்த மின்மோட்டார் பொருத்துதல் | 400000 |
| 25 | நாச்சிபாளையம், எல்.கே.ஏ. நகர், இந்திராநகர் மற்றும் புதுப்பை நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் செய்தல் | 1000000 |
| 26 | வேலகவுண்டன்பாளையம், மு.பழனிச்சாமி நகர் மற்றும் எல்.கே.ஏ.நகர் பகுதிகளில் புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்து தண்ணீர் வசதிகள் செய்தல் | 1000000 |
| 27 | தீத்தாம்பாளையம் தெற்கு பகுதி மற்றும் தாராபுரம் ரோடு பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் செய்தல் | 700000 |
| 28 | வையாபுரி நகர், அரியாண்டிவலசு, காடையூரான்வலசு பகுதிகளில் புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்து தண்ணீர் வசதிகள் செய்தல் | 700000 |
| 29 | நாச்சிபாளையம் கிழக்கு, தீத்தாம்பாளையம் ஏ.டி.காலணி மற்றும் சலவையாளர் காலனி பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் செய்தல் | 700000 |
| | **மொத்தம்** | **18452000** |

**சிறுசேமிப்புத் திட்ட மாவட்ட ஊக்குவிப்புத் தொகை 2016–2017**

சிறுசேமிப்புக் குறியீடு நடப்பு நிதியாண்டில் எதுவுமில்லை.

**32 – 33 பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் 25 துப்புரவு பணியாளர்கள், மற்றும் ஒரு துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளரும் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு ஆண்டிற்கு, 2 செட் சீருடைகளும், 1 செட் காலணிகளும் இலவசமாக வழங்கப்படுகிறது. இவர்களுக்கு தற்போது அரசினால் கொடுக்கப்படும் அனைத்து சலுகைகளும், அமுலாக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் பணியாளர்களுக்கான ஊதிய செலவு ரூ. 70,00,000 /–ம் மற்றும் உபகரணங்கள் கிருமி நாசினிகள், சீருடைகள் வாங்கிய வகையில் ரூ. 5,00,000 /– ஆகும்.

**34 வெறி நாய் தடுப்பு**

அறிக்கையாண்டில், வெறிநாயக்கடி நோய் ஏதுமில்லை.

**ஆடுவதைச்சாலை**

நகராட்சியில் ஆடுவதைச்சாலை பராமரிப்புக்கு புதியதாக கட்டிடம் கட்டப்பட்டு ஏலம் விடப்பட்டுள்ளது.

**தொழில் நிறுவனம்**

ஆணையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படுகிறது. மேற்படி தொழில்களுக்கு சட்டப்படி உரிமங்களும் வழங்கப்படுகிறது.

**35 நகராட்சி வாரச்சந்தை மற்றும் இதர குத்தகை வரவு விபரங்கள்**

| வரிசை எண் | விபரம் | 2014-2015 | 2015-2016 | 2016-2017 |
|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை – 1 | 1150850 | 1191750 | 1251338 |
| 2 | ஆடுவதைச்சாலை | 17466 | 18317 | 19761 |
| 3 | வணிகவளாகம் – 27 | 786997 | 904816 | 910626 |
| 4 | கட்டணகழிப்பிடம் – 7 | 533418 | 544283 | 530561 |
| 5 | பேருந்து நுழைவு கட்டணம் – 1 | 619608 | 425000 | 446250 |
| 6 | சைக்கிள் நிறுத்துமிடம் | 121055 | 129918 | 140543 |
| 7 | பேருந்து நிலைய உணவகம் | - | - | - |
| | **மொத்தம்** | **3229394** | **3214084** | **3299079** |

வாரச்சந்தை ஒன்று உள்ளது.

**மரம் நடுதலும், பூங்காக்களும்**

நடப்பு ஆண்டில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.
சிவநாதபுரம் குடிநீர் தொட்டி வளாகத்தில் ஒரு பூங்கா பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**ஓய்வூதியம்**

நகராட்சி நிர்வாக ஆணையாளரால் மாதந்தோறும் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மாநில பகிர்வு நிதியில் ஓய்வூதியத் தொகை பிடித்தம் செய்யப்படுகிறது.

**36 நில அபிவிருத்தி**

2016–2017–ம் ஆண்டில், கீழ்காணும் விபரப்படி கட்டிடம் கட்ட அனுமதி மனுக்கள் வரப்பட்டு, முடிவெடுக்கப்பட்டுள்ளன.

1) 01.04.2016–ம் தேதி நிலுவை – 26
2) நடப்பு ஆண்டில் வரப்பெற்றது – 137
3) உரிமம் வழங்கப்பட்டவை – 147
4) உரிமம் மறுக்கப்பட்டது – 1
5) உரிமம் திருப்பப்பட்டது – 14
6) 31.03.2017–ம் தேதியில் நிலுவை – 1

**37 வரை கடப்புகள்**

நகராட்சியில் வரை கடப்புகள் ஏதுமில்லை.

**38 பொது வருவாய்**

**வருவாய் கணக்கு**

இந்நகராட்சியின் தீர்மானம் எண். 62, நாள். 27.06.2014–ன்படி 01.04.2014 முதல் சொத்துவரியாக ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு கட்டிடங்கள் வருட வாடகையின் மதிப்பில் 11% விதிக்கப்படுகிறது.

1. பொதுக் காரியங்களுக்கு வரி 2%
2. தண்ணீர் வரி 4%
3. சாக்கடை வரி 1%
4. துப்புரவு வரி 1%
5. விளக்கு வரி 2%
6. நூலகவரி 1%

**தொழில்வரி**

தமிழ்நாடு சட்டம் 24, 1992–ன்படி குறும அளவில் தொழில்வரி விதிக்கப்படுகிறது. இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண். 99, நாள். 07.07.2013–ல் 25 % சதவீதம் கூடுதலாக உயர்த்தி 01.10.2013 முதல் திருத்தியமைக்கப்பட்டு அதன்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

**39 வரி விதிப்பு சொத்துவரி**

2016–2017–ம் ஆண்டு வருட முடிவில் மொத்தம் 17523 வரி விதிப்புகள் உள்ளது.

**40 கேட்பு, வசூல், மற்றும் நிலுவை**

அறிக்கையாண்டில், மொத்த கேட்புத் தொகை ரூ. 245.05 /– இலட்சம் ஆகும். இதில் ரூ. 231.74 /– இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. நடப்பு கேட்பில் அனைத்து இனங்களிலும் 100% வசூலிக்கப்பட்டு உள்ளது.

**41 பொது**

2016–2017 வெள்ளகோவில் நகராட்சியில் வரப்பெற்ற வரவு மற்றும் செலவு விபரங்கள் கீழ்க்கண்டவாறு.

| வ.எண் | சாதாரண வரவு விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 109.41 |
| 2 | தொழில்வரி | 21.42 |
| 3 | காலியிடவரி | 17.21 |
| 4 | முத்திரைதீர்வை வரி | 62.13 |
| 5 | கேளிக்கை வரி | 0.00 |
| 6 | கட்டிட உரிமம் | 6.99 |
| 7 | பேருந்து நுழைவுக் கட்டணம் | 4.46 |
| 8 | கழிப்பிட கட்டணம் | 5.30 |
| 9 | சான்று கட்டணம் | 1.50 |
| 10 | வாரச்சந்தை ஏலம் | 12.51 |
| 11 | குடிநீர் கட்டணம் | 51.31 |
| 12 | சென்டேஜ் கட்டணம் | 6.61 |
| 13 | அபிவிருத்திக் கட்டணம் | 2.36 |
| 14 | கடைகள் ஏல வரவு | 9.11 |
| 15 | வங்கி வட்டி வரவு | 3.00 |
| 16 | லைசென்ஸ் கட்டணம் | 2.15 |
| 17 | மாநில பகிர்வு நிதி | 655.43 |
| | **மொத்தம்** | **970.90** |

| வ.எண் | சாதாரண செலவு விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | பணியாளர் சம்பளம் மற்றும் அலவன்ஸ் | 225.00 |
| 2 | பணியாளர் போனஸ் | 3.00 |
| 3 | சீருடை மற்றும் காலனி | 0.75 |
| 4 | பயணப்படி | 2.50 |
| 5 | மின்கட்டணம் – குடிநீர் | 35.50 |
| 6 | மின்கட்டணம் – வீதிவிளக்கு | 49.50 |
| 7 | மின்கட்டணம் – கட்டிடம் | 1.80 |

| | | |
|---|---|---|
| 8 | வீதிவிளக்கு பராமரிப்பு | 12.00 |
| 9 | பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருந்து மற்றும் உபகரணங்கள் | 10.00 |
| 10 | பொது சுகாதார வாகனங்கள் பராமரிப்பு (டீசல் உட்பட) | 15.00 |
| 11 | தண்ணீர்கட்டணம் செலுத்தியது | 42.29 |
| 12 | கடன் தொகை செலுத்தியது | 0.00 |
| 13 | கடனுக்கு வட்டி செலுத்தியது | 0.00 |
| **13** | குடிநீர் விநியோகம் பராமரிப்பு மற்றும் ஆழ்குழாய் கிணறு | 150.00 |
| | **மொத்தம்** | **547.34** |

மேற்கண்ட வரவு செலவு விபரப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி சாதாரண செலவில் ஏற்படும் கூடுதல் செலவினங்களை நகராட்சிக்கு மாதந்தோறும் அரசால் வழங்கப்படும் மாநில பகிர்வு நிதியில் ஈடு செய்யப்படுகிறது.

**42 – 46 இல்லை**

**47 தணிக்கைத்தடை விபரம்**

1. ஆரம்பத்தில் உள்ள தணிக்கைத் தடைகள் – 105
2. நடப்பாண்டில் எழுப்பப்பட்ட தணிக்கைத்தடைகள் – 69
3. 2016–2017–ம் ஆண்டில் தணிக்கைத்தடைகள் – 5 கூட்டமர்வு, 1 உயர்மட்டக்குழுக் கூட்டம்

நிவர்த்தி செய்யப்பட்டவை – 165

நிலுவையில் உள்ளவை – 9

**48 ஆஸ்தியும் பொருப்பும்**

இவ்வருடம் தொடரப்பட்டதும், முடிக்கப்பட்டதுமான விபரம்

1) வருட ஆரம்பத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் விபரம் – 10
2) நடப்பு ஆண்டில் தொடரப்பட்டவை – 1
3) முடிக்கப்பட்டவை – 1
4) ஆண்டு இறுதியில் நிலுவையில் உள்ள வழக்குகள் – 10

நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**49 நிதி நிலை விபரம்**

அறிக்கை ஆண்டில் நகராட்சி நிதி நிலை போதுமானதாக இருந்தது.

**50 பொது**

இந்நகராட்சி நிர்வாகம் துரிதமாக செயல்பட முழு ஒத்துழைப்பும், அறிவுரையும் வழங்கி, நடத்தி செல்லும் மன்றத் தலைவர் அவர்களுக்கும், மற்றும் துணைத்தலைவர், அனைத்து நகர் மன்ற உறுப்பினர்களுக்கும், நன்றியை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், நிர்வாகம் செவ்வனே நடைபெற பொது மக்கள் குறைகளை பெரிதுபடுத்தாமல், முழு ஒத்துழைப்பு கொடுத்து வருவதற்கும், நகராட்சியின் நன்றியை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இந்நகரம் தூய்மையாகவும், நிர்வாகம் நல்ல முறையிலும், நடைபெற தங்களை முழுமையாக நகராட்சிப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டு பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியையும், நகராட்சியின் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**
**திருப்பூர் மாவட்டம்**